9th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நமது அரசாங்கம் அதற்கு எக்ஸெம்ஷன் கொடுத்ததற்குக் காரணம் மின்சார போர்டு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம், மற்ற சலுகைகள் எல்லாம் தொழிற்சட்டத்தில் கண்டுள்ளனவற்றுக்கும் அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். அதனுல்தான் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளைக்கூட அமல் செய்யவில்லை என்பதான புகார் வந்தது. அதை கமிஷனரை விட்டு பரிசிலனை செய்யச் சொல்லியிருக்கிறோம். அது பரிசிலனையில் இருக்கிறது.

திரு. எம். எஸ். மணி : மின்சார போர்டு ஊழியர்களுக்கு விதிவிலக்கு கொடுத்ததற்குக் காரணம் சட்டத்தில் கண்டுள்ளவற்றுக்கும் அதிகமாக சம்பளம், மற்ற சலுகைகள் கொடுப்பது தான் என்ருர்கள். அதுபோலவே தனியார் ஸ்தாபனங்களிலும் சட்டத்தில் கண்டுள்ளனவற்றுக்கு அதிகமாக, தாராளமாக சம்பளம், மற்ற சலுகைகள் அளித்தால் இவற்றுக்கும் விதி விலக்குக் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மின்சார போர்டு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதுபோல தொழிலாளர்களுடைய நலனுக்கு உகந்ததாகக் கொடுக்கப்படுமானல் அதையும் கவனிக்கலாம்.

Spinning and Weaving Mills at Coimbatore

* 224 Q.—SRI V. SANKARAN : / SRI M. S. MANI : } Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government are aware of the closure of the Coimbatore Spinning and Weaving Mills, and non-payment of wages to its workers, since October, 1965 ; and

(*b*) if so, the action taken thereupon by the Government.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The question was examined by the Government. It has been reported that the management of the mills could not pay the wages for October 1965 and for seven days in November 1965 due to financial difficulties ; also, that the payment will be effected as soon as the new managements to be constituted, succeed in securing sufficient loan to restart the mills and to clear the debts. It is likely that the mills will resume work shortly.

திரு. வை. சங்கரன் : இதுவரை சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தது நிறுத்தப்பட்டு விட்டது. அப்படி என்ருல் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் ரெகுலேஷன் ஆக்டின்கீழ் ஒரு கமிட்டி அமைத்து என்ன காரணத்தால் அந்த மில் நிறுத்தப்பட்டு விட்டது என்று பரிசீலனை செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்; மில் நடத்தப்பட வேண்டும். அதுதான் கவனிக்கப்படுகிறது. கனம் அங்கத்தினர் கூறுவதுபோல் கமிட்டி நியமிப்பதில் பயன் இல்லை.

[9th March 1966

திரு. எம். எஸ். மணி : இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்பட்டு முதலாளிகள் மில்லை மூடிவிடுகிறபோது அரசாங்கம் மகாராஷ்டிர அரசாங்கம் செய்தது போல், அந்த மில்லை ஏற்று நடத்த முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி கனம் தொழிலமைச்சர் அவர்கள் முன்பே விளக்கிக் கூறியிருக்கிறார்கள். திறமையோடு நடத்தப்பட்ட ஒரு மில்லை அரசாங்கம் ஏற்று நடத்துவதில் பயன் இருக்கிறது. சரியாக நடக்காத மில்லை அரசாங்கம் ஏற்று நடத்துவதில் பயன் இல்லை. தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள என்ன செய்வது என்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் கவனித்துக் கொண்டுதான் வருகிறது.

திரு. செ. மாதவன் : இப்படி லாக் அவுட் செய்வது திறமையற்ற செயலின் காரணமாக இருக்கலாம். சில சமயங்களில் தொழிலாளர்களைப் பழி வாங்க வேண்டுமென்றும் செய்யலாம். அப்படிப்பட்ட நேரத்தில் மானேஜ்மெண்டை ஒர்க்கர்ஸினிடத்தில் ஒப்படைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தொழிலாளர்களைப் பழி வாங்குவதற்காகச் செய்ததா அல்லது திறமையின்மை காரணமாக மில்லை மூடும் நிலை ஏற்பட்டதா என்பதையெல்லாம் அப்போதைக்கப் போது அரசாங்கம் பரிசீலனை செய்து, தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. தொழிலாளர்களே மில்லை நடத்துவதாக இருந்தால் அதற்கு அவர்கள் முன் வந்து அதற்கு ஆற்றல் தங்களிடம் இருப்பதாகத் தெரிவித்தால் அரசாங்கம் கவனம் செலுத்தலாம்.

திரு. எம். எஸ். மணி : நமது அரசாங்கம் சோஷலிசத்தைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. அப்படி இருக்க, மூடப்பட்ட மில்களை இன்றைய தினம் அரசாங்கம் ஏற்று நடத்தினால் அரசாங்கத்திற்கு நஷ்டம் வரும் என்று கருதுவது ஏன் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சோஷலிசம் என்பதைப்பற்றி அவரவர்களுக்கு வேறு வேறு கருத்து இருக்கிறது. இதையெல்லாம் எடுத்துக்கொண்டு ஆராய்ந்து அதற்கு விளக்கம் கொடுக்க முடியாது. பிரச்சினை இந்த மில் மூடப்பட்டதைப் பற்றியது. சீரான நிலையில் இல்லாத மில்லை அரசாங்கம் எடுத்துக் கொண்டு நடத்துவதில் பயன் இல்லை. தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் ஆலை மறுபடியும் நடக்க என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அது கவனிக்கப்பட்டு வருகிறது. இரண்டு மில் அதிபர்கள் இந்த மில்லை ஏற்று நடத்த பணம் சேர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். முதலீடு இப்போது இல்லை. அதை எப்படி [illegible]த்துவது என்பதிலே கவனம் செலுத்திக்கொண்டு வருகிறார்கள்.

* 225 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government examined the representation, dated 3rd November 1965 sent to them by the Secretary of